**வடமத்திய மாகாண சபையி - 2015**

வடமத்திய மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது. இதில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பான விபரமான அறிக்கை மாகாண சபையில் முன்வைப்பதற்காக உரிய காலத்தில் வழங்கப்படும்.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

02. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, வட மத்திய மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 04 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2.2.2 ஏனைய கணக்குகள்

2016 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு மாகாண சபையின் மீளாய்வாண்டிற்கான ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தலின் செயல்முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | 2015 ஆம் ஆண்டிற்காக | | | முன்னைய ஆண்டிற்காக |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 30 | 30 | - | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 21 | 21 | - | - |
| (iii) | மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 33 | 33 | - | - |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 07 | 07 | - | - |
| (v) | நிதியக் கணக்குகள் | 05 | 02 | 03 | 16 |
| (vi) | நியதிச் சட்ட கணக்குகள் | 05 | 05 | - | - |
| | மொத்தம் | 101 | 98 | 03 | 16 |

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது குத்தகை அடிப்படையில் சுங்கத்தீர்வையின்றி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 216,019,620 தொகையான 73 வாகனங்களின் கிரயம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 509,305,000 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக ரூபா

293,330,380 தொகையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சுங்கத்தீர்வையின்றி வாகனங்களைக் கொள்வனவு செய்ததன் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான வரி வருமானமாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 293,564,341 பெறுமதியானது மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்படாது குத்தகைக் கொடுப்பனவுகளின் தவணைப் பணங்களுக்கு ஒத்ததாக கணிப்பிடப்பட்ட ரூபா 43,584,389 பணம் வருமானமாக நிதி செயலாற்றல் அறிக்கையில் காட்டப்பட்டு எஞ்சியுள்ள ரூபா 249,979,630 பெறுமதி முன்னைய ஆண்டிற்கான வருமானமாகச் செம்மையாக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது முற்பணக் கணக்கு மீதிகள், கட்டுநிதிக் கணக்கு மீதிகள், வைப்புக் கணக்கு மீதிகள், கடன்பட்டோர் மீதிகள் என்பன உட்பட உள்ளடக்கிய ஏனைய செயற்பாடற்ற கணக்கு மீதிகளை ஏடுகளிலிருந்து நீக்கும் போது இனங்காணப்பட்டிருந்த ரூபா 726,282 தொகையான இலாபம் மற்றும் ரூபா 917,685 தொகையான நட்டம் மீளாய்வாண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றில் செம்மையாக்கப்படாது அது 2015 சனவரி 01 இல் உள்ளவாறான மாகாண சபை நிதியத்தின் ஆரம்ப மீதிக்கு செம்மையாக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 191,403 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம் 06 வகையான நிலையான சொத்துக்களுக்குரிய ரூபா 2,683,284,048 தொகையான மீதிகளுக்கு மீளாய்வாண்டின் போது சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களின் ரூபா 999,221,381 தொகையான பெறுமதி சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டின் இறுதியில் அச்சொத்துக்களின் பெறுமதி ரூபா 3,682,505,430 ஆக இருக்க வேண்டிய போதிலும் அப்பெறுமதி ரூபா 4,313,542,132 ஆக நிதிக்கூற்றுக்களிலும் செயலாற்றல் அறிக்கையிலும் காட்டப்பட்டிருந்தன. அப்பெறுமதிகளுக்கிடையிலான ரூபா 631,036,702 வித்தியாசம் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதியாக செம்மையாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்கூறிய 06 வகையான நிலையான சொத்துக்கள் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட வாகனங்கள் மற்றும் ஏனைய மூலதனச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 113,573,799 ஆல் குறைத்து மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகளில் காட்டப்பட்டதன் காரணமாக முன்னைய ஆண்டுகளுக்குரிய ஆனால் மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி அந்த அளவினால் குறைத்து மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலும் செயலாற்றல் அறிக்கைகளிலும் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் 15 ஆவது குறிப்பின் பிரகாரம் ரூபா 104,995,161 தொகையான பிரதம செயலாளர் அலுவலகத்தின் மற்றும் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 03 முற்பணக் கணக்குகளுக்குரிய மீதிகளின் மொத்த தொகையானது அந்நிறுவனங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதிகளின் பிரகாரம் ரூபா 84,842,446 ஆக இருந்ததனால் 02 கணக்குகள் ரூபா 25,386,431 மறைப் பெறுமதியினாலும் ஏனைய கணக்குகள் ரூபா 4,835,832 நேர்ப் பெறுமதியினாலும் வேறுபட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் 16 ஆம் குறிப்பின் பிரகாரம் மாகாண சபை அபிவிருத்தி திணைக்களத்தின் 02 வணிக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்குரிய ரூபா 31,380,298 தொகையான மீதிகளின் மொத்தமானது

அத்திணைக்களத்தின் ஏடுகளிலுள்ள வணிக முற்பணக் கணக்கு கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 18,310,298 ஆக இருந்ததனால் ரூபா 13,070,000 தொகையான இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் 16 ஆவது கூற்றின் பிரகாரம் 06 நிறுவனங்களின் வைப்புக் கணக்குகளின் ரூபா 102,744,118 தொகையான மீதிகளின் மொத்தமானது ஒதுக்கீட்டுக் கணக்குகளின் குறிப்பு (iii) இலுள்ள முற்பணக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான பொழிப்புக்களின் பிரகாரம் ரூபா 107,095,765 ஆக இருந்ததனால் 03 வைப்புக் கணக்குகள் ரூபா 6,157,569 தொகையான நேர்ப் பெறுமதியாலும் ஏனைய 03 கணக்குகள் ரூபா 1,805,922 தொகையான மறைப் பெறுமதிகளாலும் வேறுபாடு இடம்பெற்றிருந்தது.

(ஈ) உள்;ராட்சி திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு (v) இலுள்ள கட்டுநிதிக் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,349,628 தொகை தீர்த்துவைக்கப்படாத கட்டுநிதி வரவு மீதியானது நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் குறிப்பு 14 (ஆ) இன் பிரகாரம் ரூபா 1,007,628 ஆக இருந்ததனால் ரூபா 342,000 ஆனது இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடாகும்.

(உ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் 01 ஆம் மற்றும் 02 ஆம் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 345,990,548 தொகையான 08 மாகாண அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்குரிய பொறுப்புக்களின் பெறுமதி அந்நிறுவனங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளின் டீ.ஜீ.எஸ்.ஏ-8 படிவத்தின் பிரகாரம் ரூபா 244,192,834 ஆக இருந்ததனால் 05 நிறுவனங்களின் ரூபா 203,180,430 தொகையான நேர்ப் பெறுமதியினாலும் மிகுதி 03 நிறுவனங்களின் ரூபா 101,382,716 தொகையான மறைப் பெறுமதியினாலும் வேறுபாடு இடம்பெற்றிருந்தது.

(ஊ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கையுடனான 06 மற்றும் 07 ஆம் பட்டோலையின் பிரகாரம் மாகாண சுகாதார அமைச்சுக்கும் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய ரூபா 10,060,650 தொகையான நடைமுறையற்ற சொத்துக்களின் பெறுமதியானது அந்நிறுவனங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளிலுள்ள நடைமுறையற்ற சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையின் பிரகாரம் ரூபா 11,439,294 தொகையாக இருந்ததனால் ரூபா 1,378,644 தொகையான இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை
----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்
--------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பின்வரும் 04 நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்ட 20 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளுக்காக வழங்கப்பட்ட 16 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2016 ஆகஸ்ட் 31 திகதி வரையும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 939,553,497 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுகளுக்குரிய கணக்காய்வு ஐய வினாக்களுக்கான கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 39,876,268 ஆகும்.

| அமைச்சு / திணைக்களம் | மீளாய்வாண்டு | | முன்னைய ஆண்டு | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை | கணிப்பிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி | கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை | கணிப்பிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி |
| | | ரூபா | | ரூபா |
| மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் | 08 | 29,448,780 | 03 | 99,514 |
| மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை | 09 | 328,499,329 | - | - |
| பிரதான அமைச்சு | 06 | 363,725,313 | 06 | 39,776,754 |
| பிரதான அமைச்சு அலுவலகம் | 02 | 217,880,075 | - | - |
| மொத்தம் | 25 | 939,553,497 | 09 | 39,876,754 |

(ஆ) புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கெபிதிகொல்லாவ ஆதார வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்திற்கு 2015 ஆம் ஆண்டில் 12 சந்தர்ப்பங்களில் கிடைத்த ரூபா 11,222,599 பெறுமதியான மருந்து இருப்புக்கள் 2016 மார்ச் 01 ஆந் திகதி வரை இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண சபையின் 03 நிறுவனங்களால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,440,616,408 தொகையான சொத்துக்களின் தகவல்களை உள்ளடக்கி சொத்துக்கள் முகாமைத்துவ மென்பொருட்கள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தகவல்கள் சமர்ப்பிக்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இரண்டாவது சுகாதார அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் பேணப்பட்டு வந்த பயிற்சி மற்றும் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 4,848,931 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரம், நிகழ்ச்சித்திட்டத்தின் காலம், பங்குபற்றுகின்ற வளவாளர்கள் அவர்களின் விரிவுரைகளின் பொழிப்பு என்பன தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச செயலகங்களில் காணி தொடர்பான கடமைகளை நிறைவேற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு படிகளாக 2015 ஆம் ஆண்டின் போது

ரூபா 2,780,142 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக ஊக்குவிப்பு முன்மொழிவுத் திட்டமொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வடமத்திய மாகாண சபைக்குரிய அனைத்து உடன்படிக்கைகளின் பிரதிகள், மாகாண அமைச்சரவைத் தீர்மானம், செயலக குழுத் தீர்மானம், நியதிச்சட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபைத் தீர்மானம், உத்தியோகத்தர்களை வேலைகளிலிருந்து இடைநிறுத்தி வைத்தல் கடிதம், உத்தியோகத்தர்களை மீண்டும் சேவைக்கு அமர்த்தல் கடிதம், உத்தியோகத்தர்கள் இளைப்பாறும் கடிதம் ஆகியவற்றை உள்ளடக்கிய முக்கியமான கடிதங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் என்பவற்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வடமத்திய மாகாண சபையின் அனைத்து நிறுவனங்களினாலும் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கிணங்க மாகாண சபையின் 03 நிறுவனங்களால் 2015 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 960,918,658 தொகையான ஒப்பந்தங்களின் 455 செயற்திட்டங்களுக்குரிய உடன்படிக்கைகளின் பிரதிகள் அந்த உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களிலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக அச்செயற்திட்டங்களை அமுல்படுத்திய சந்தர்ப்பங்களில் பரிசோதனை செய்யும் சந்தர்ப்பம் கணக்காய்வு செய்வது இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) கொடுப்பனவுச் சான்றுறுதிகள் சமர்ப்பிக்கப்படாமை

மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மீளாய்வாண்டிற்கான ரூபா 16,908,440 பெறுமதியான 157 கொடுப்பனவுச் சான்றுறுதிகளும் முன்னைய ஆண்டிற்கான ரூபா 23,987,757 பெறுமதியான 31 கொடுப்பனவுச் சான்றுறுதிகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| நிறுவனம் | மீளாய்வாண்டு | | முன்னைய ஆண்டு | |
|---|---|---|---|---|
| | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை | பெறுமதி | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா |
| 1. மாகாண கல்வித் திணைக்களம் (அனுராதபுர வலயம்) | - | - | 23 | 495,947 |
| 2. மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் (அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம்) | 157 | 16,908,440 | - | - |
| 3. முதலமைச்சு (சுற்றுலா நிலையம்) | - | - | 08 | 23,491,810 |
| மொத்தம் | 157 | 16,908,440 | 31 | 23,987,757 |

2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) சட்டங்கள் | | |
| 1939 இன் 48 ஆம் இலக்க சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 31 ஆம் அத்தியாயத்தின் 51(1) ஆம் பிரிவு | - | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை திணைக்களத்தின் மடாடுகம சான்றுபடுத்திய பாடசாலை தொடர்பாக சான்றுபடுத்திய பாடசாலைக்கு இருக்க வேண்டிய நியம தரம் மற்றும் செயற்திறன் சம்பந்தமாக நிரந்தர கட்டளை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு | 2,935,330 | சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு பணத்தை கணிக்கும் கவனத்தில் கொள்ள வேண்டுமென அதிகாரச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள மொத்த உழைப்புக்களுக்கு மேலதிகமாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஏனைய உழைப்புக்களையும் கவனத்தில் கொண்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டியிருந்த ரூபா 4,469,281 பணம் ரூபா 2,935,330 இனால் மிகைத்து ரூபா 7,404,611 தொகை அந்நிதியத்திற்கு செலுத்தப் பட்டிருந்தது. |
| 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டம் | 6,893,798 | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக சபைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், ஆளும் கட்சியின் பிரதம கொரடா, எதிர்க் கட்சியின் பிரதம கொரடா ஆகிய 04 பதவிகள் உருவாக்கப்பட்டு மாகாண சபை உறுப்பினர்களுக்கு உரித்தான வரப்பிரசாதங்களை மிகைத்து பொருத்தமற்ற வகையில் வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய பதவியினர்களுக்கு 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த வரப்பிரசாதங்களுக்காக ரூபா 6,893,798 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் கடந்த மூன்று ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட அவ் வரப்பிரசாதங்களுக்காக ரூபா 17,517,886 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. |
| 1993 இன் 18 ஆம் இலக்க, 1988 இன் 47 ஆம் இலக்க மற்றும் 1982 இன் 3 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டங்க ளால் திருத்தப்பட்ட 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய | 733,836 | ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பை கணிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டுமென அதிகாரச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள மொத்த உழைப்புக்களுக்கு மேலதிகமாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஏனைய உழைப்புக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,117,320 தொகை ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவு. | | 733,836 ஆல் மிகைத்து ரூபா 1,851,156 தொகை அந்நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டம்<br>--------------------------------------- | | |
| | 5(4)(ஆ) பிரிவு | 68,445 | மீளாய்வாண்டின் போது இளைப்பாறிய ஒரு உத்தியோகத்தருக்கு அவரின் ஓய்வூதிய பணிக்கொடையை உரிய திகதிக்கு 02 மாதங்கள் 18 நாட்கள் தாமதித்து கொடுப்பனவு செய்ததன் காரணமாக செலுத்த வேண்டியதான மிகைக் கட்டணம் அந்த உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| | 20 ஆம் பிரிவு | 7,852,651 | பணிக்கொடைக்கான ஏற்பாட்டை கணிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டுமென அதிகாரச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள மொத்த உழைப்புக்களுக்கு மேலதிகமாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஏனைய உழைப்புக்க ளையும் கவனத்தில் கொண்டதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடைக்கான ஏற்பாடாக ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய ரூபா 10,438,879 தொகை ரூபா 7,852,650 ஆல் மிகைத்து ரூபா 18,291,529 அந்நிதியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த மிகை ஏற்பாட்டு கணிப்பீட்டின் காரணமாக மீளாய்வாண்டின் போது ஓய்வுபெற்ற ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 33,412 தொகை ஓய்வூதியப் பணிக்கொடையாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | நியதிச்சட்டம்<br>----------------------- | | |
| | 1988 இன் 01 ஆம் இலக்க வடமத்திய மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை நியதிச் சட்டத்தின் 15(3) ஆம் பிரிவு, 2007 வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயல் நடைமுறை விதி 412. | 2,197,350 | நியதிச்சட்டத்திற்கு, ஆட்சேர்ப்பு நடை முறைக்கு மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயல்நடைமுறை விதிகளுக்கு முரணாக மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உயர் வகுப்பிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டு அந்த உத்தியோகத்தருக்கு உரித்துள்ள அளவுக்கு மிகையாக உயர்ந்த சம்பளம், படிகள், வரப்பிரசாதங்கள் என்பன வழங்கப்பட்டதன் காரணமாக 2011 திசெம்பர் 08 ஆந் திகதியிலிருந்து 2016 யூன் 30 ஆந் திகதி வரையான காலத்திற்காக ரூபா 2,197,350 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | தாபன விதிக்கோவை<br>------------------------------------ | | |
| | II ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவு | 1,267,493 | முறையாக பதில் கடமை நியமனம் மேற்கொள்ளப்பட்டு பதிற் கடமை படி அல்லது கடமை மேற்கொள்ளும் அல்லது கொடுப்பன வுக்குப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பதிலாக 02 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள், மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் வைத்தியசாலையொன்றில் பதிற்கடமைகள் மேற் கொண்ட 05 உத்தியோகத்தர்களுக்கு அவர்களுக்கு ஒரு நாளுக்கு உரித்துள்ள 04 மணித்தியால மேலதிக கடமைகளுக்கான (மேலதிக நேர வேலை) படிகளுக்கு மேலதிகமாக மேலும் 04 மணித்தியால மேலதிக கடமைகளுக்காக (மேலதிக நேர வேலை) நாளாந்தம் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| | XIV ஆம் அத்தியாயத்தின் 2 மற்றும் 3 ஆம் உப பிரிவுகள் | 16,020 | பொலன்னறுவை ராஜகீய வித்தியாலயமானது நிரந்தர சேவை நிலையத்திற்கு அண்மையில் அமைந்திருந்த போதிலும் உத்தியோகத்தர் வசிக்கும் இடத்திலிருந்து பொலன்னறுவை ராஜகீய வித்தியாலயத்தில் பொருள் மெய்மையாய்விற்கு போவதற்காக பொலன்னறுவை வலயக் கல்வி அலுவலகத்தினால் 02 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளின் மூலம் மேலதிகமாக இணைந்த படிகளும் பிரயாணச் செலவுகளும் செலுத்தப்பட்டிருந்தன. |
| | XIV ஆம் அத்தியாயத்தின் 4.1.1 ஆம் பிரிவு | 722,722 | இணைந்த படிகள் செலுத்தப்படுகின்ற பயிற்சிக் காலத்தின் உச்ச அளவு 02 வாரங்களாக இருக்க வேண்டிய போதிலும் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பயிற்சி காலத்திற்காக பங்குபற்றிய 21 உத்தியோகத்தர்களுக்கு 02 வார காலத்தை மிகைத்து இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஈ) | மாகாண நிதி விதி | | |
| | 54 | - | 2013 சனவரி 04 ஆந் திகதியிலிருந்து 2015 யூலை 17 ஆந் திகதி வரையான காலத்தின் போது பொலன்னறுவை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய வாகனங்களுக்கு இடம்பெற்ற 12 விபத்துக்கள் சம்பந்தமான விசாரணைகள் இடம்பெற்றிருக்க வில்லை. |
| | 146.3.4 | 157,402,084 | நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு உரிய ஆவணங்கள் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்க ப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்கு முன்னர் செய்யப்பட வேண்டிய திணைக்களச் செயற்பாடுகளை 2014 திசெம்பர் 31 இல் பூர்த்திசெய்ய முடியாதிருந்ததாக பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்து பிரதம செயலாளர் அலுவலகத்தினால் வைப்புக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த ரூபா 162,545,141 பணத்தில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கொடுப்பனவு செய்யாது எஞ்சியிருந்த பணம் ரூபா 157,402,084 ஆகக் காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 283.4 | 8,502,901 | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த 16 காசோலைகள் சம்பந்தமாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. |
| (உ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் வழிகாட்டி | 65,379,447 | வடமத்திய மாகாண சபையின் 03 நிறுவனங்களால் பொருட்கள் மற்றும் சேவை களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நிர்மாண நடவடிக்கைகளுக்காகவும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 555,582,407 பணத்தின் அடிப்படையில் ரூபா 65,379,447 தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப் பட்டிருந்தும் அது சம்பந்தமாக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு மாதாந்தம் அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. |

| நிறுவனம் | பெற்றுக்கொள் ளப் பட்ட வேலைகள், பொருட்கள், சேவைகள் என்ப வற்றின் பெறுமதி | செலுத்தப்பட்டு ள்ள பெறுமதி சேர் வரித்தொகை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| முதலமைச்சு | 87,698,804 | 9,511,679 |
| மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை | 450,891,376 | 53,998,623 |
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் | 16,992,227 | 1,869,145 |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஏனையவை | | |
| | கல்வி அமைச்சு செயலாளரின் 1/27/1/5/1/2007 ஆம் இலக்க 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய சுற்றறிக்கை. | - | பொலன்னறுவை மற்றும் ஹிங்குராக்கொடை கல்வி வலயத்திற்குரிய மாகாண சபை பாடசாலைகளிலுள்ள 663 ஆசிரியர்கள் 6 ஆண்டுகளுக்கும் 25 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் ஒரே பாடசாலையில் சேவையாற்றி வருகின்றமை அவதானிக்கப் பட்டது. |

2.2.7 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வடமத்திய மாகாணத்தில் சோயா மற்றும் போஞ்சி பயிரிட்டு வருகின்ற விவசாயிகளுக்கு 50 சதவீத நலன்பெறுனர் பங்களிப்பின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டின் போது பகிர்ந்தளிப்பதற்காக வடமத்திய முதலமைச்சினால் அந்த ஆண்டின் போது ரூபா 279,300,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 3750 விவசாய நீர்ப் பம்பிகளில் 2015 ஆம் ஆண்டின் இறுதிவரை ரூபா 15,640,800 தொகையான 210 நீர்ப் பம்பிகள் பகிர்ந்தளிக்கப்படாது வழங்குனரின் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டன.

(ஆ) மாகாண நிதி விதி 259.2 மற்றும் 259.3 இன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 31 ஆந் திகதியில் அமைச்சு / திணைக்களங்களில் எஞ்சியுள்ள கட்டுநிதி மீதிகள் அடுத்து வரும் ஆண்டின் சனவரி 10 ஆந் திகதிக்கு அல்லது மாகாணத் திறைசேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற திகதிக்கு முன்னர் மாகாண திறைசேரிக்கு திருப்பி அனுப்ப வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 14 (ஆ) இன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 அமைச்சுக்கள் / திணைக்களங்களின் கட்டுநிதிக் கணக்குகளில் தீர்த்துவைக்கப்படாத வரவு மீதிகளின் மொத்தம் ரூபா 37,525,737 ஆகும். இவற்றில் 70 சதவீதம் அல்லது ரூபா 26,405,861 தொகை முதலமைச்சினால் தீர்த்துவைக்கப்பட வேண்டியிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகளுக்கான குறிப்பு 15 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 05 முற்பணக் கணக்குகளில் ரூபா 1,634,162 கூட்டு மொத்தமான செலவு மீதியும் 02 வணிக முற்பணக் கணக்குகளில் ரூபா 1,497,081 தொகையான செலவு மீதியும் காணப்பட்டது.

(ஈ) தலைவருக்கும் உப தலைவருக்கும் உரித்தான தனிப்பட்ட பதவியணியினருக்குரிய சம்பளங்களும் படிகளுமாக முறையே ரூபா 4,450,980 மற்றும் ரூபா 999,480 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இதற்கு மேலதிகமாக அப்பதவியினர்களில் இருவருக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு உரித்தான தனிப்பட்ட பதவியணியினர்களுக்காகவும் சம்பளங்களும் படிகளும் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக அப்பதவியினர் இருவருக்குச் செலுத்தப்பட்டிருந்த சம்பளங்களும் படிகளும் ரூபா 1,515,120 கூட்டு மொத்தமாகும்.

03. வருமான முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையினால் 21 வருமானத் தலைப்பின் கீழ் ரூபா 2,817,577,088 தொகையான வருமானம் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,751,657,246 தொகையான வருமானத்துடன் ஒப்பிடும் போது 2 சதவீதம் அதாவது ரூபா 65,919,842 தொகையான முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் முன்னைய ஆண்டில் அந்த முன்னேற்றம் 18 சதவீதம் அல்லது ரூபா 424,886,828 ஆகும். அவ்வாறே மீளாய்வாண்டில் 21 தலைப்புக்களின் கீழான அந்த வருமானம் மாகாண சபையின் மொத்த வருமானத்தில் 17 சதவீதமாக இருந்ததுடன் அச்சதவீதம் முன்னைய ஆண்டில் 21 சதவீதமாக இருந்தது.

(ஆ) மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு 26 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மாகாணத்தில் அமைந்துள்ள அடகு பிடித்தல் நிலையங்களை ஒழுங்குமுறைப்படுத்தி அவற்றைப் பதிவுசெய்தல், வருடாந்த உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கான கட்டணங்களை அறவிடுதல் என்பவற்றிற்கான நியதிச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அடகு பிடித்தல் நிலையங்களைப் பதிவுசெய்தல், வருடாந்த உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் அவற்றிற்கான கட்டணங்களை அறவிடுதல் தொடர்பான

அறிவுரைகள் மாகாண சபையினால் வழங்கப்பட்டிருக்காததனால் அந்நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை என்பது பிரதேச செயலாளர்களின் அபிப்பிராயமாகும்.

(இ) மாகாண வருமானத் திணைக்களத்தினால் நீதிமன்றத் தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்காக வடமத்திய மாகாணத்திலுள்ள நீதிமன்றங்களுக்கு என்சீ-100 மாதிரிப் படிவங்கள் வழங்கப்பட்ட போதிலும் அந்த புத்தகங்களிலிருந்து அறவிடப்பட்ட தண்டப்பணம் தொடர்பாக பரிசோதனை இடம் பெறாமையினால் நீதிமன்றங்களால் அனுப்பிவைக்கப்பட்ட தண்டப்பணங்களின் அளவு தொடர்பான சரியான தன்மை பற்றி திருப்திகொள்ள முடியாதுள்ளது. அவ்வாறே பயன்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகங்களை மீளப்பெற்றுக்கொள்ளாமல் மீண்டும் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வழங்குவதும் இடம்பெற்றிருந்தது.

(ஈ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தினால் குத்தகை அறவிடப்பட வேண்டிய காணிகளின் அளவு மற்றும் அறவிடப்படவேண்டிய குத்தகைகள் என்பன தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்ட பதிவேடு பேணப்படாமையின் காரணமாக காணிக் குத்தகை வருமானத்தை உறுதியாக மதிப்பீடு செய்ய முடியாதிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் நிலுவையாக உள்ள குத்தகை வருமானத்தை கணிப்பீடு செய்யவும் முடியாதுள்ளது.

## 04. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 1,704,796,896 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 63,101,757 ஆகும்.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகள் ரூபா 3,230,767,070 ஆல் அதிகரித்திருந்த போதிலும் நிதி விளைவுகள் ரூபா 1,767,898,656 ஆல் அதிகரித்திருந்தது. அதற்காக அரசாங்கத்தின் மானியம் ரூபா 4,253,557,363 ஆலும் குத்தகை வருமானம் ரூபா 80,425,794 ஆலும் வரி மானியம் ரூபா 31,825,390 ஆலும் அதிகரித்தமையும் மாகாண முதலீடு (மூலதன மாற்றல்) ரூபா 634,205,290 ஆல் குறைவடைந்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 05. அதிகாரசபைக் கணக்குகள்/ நிதியக் கணக்குகள் மற்றும் வணிக முற்பணக் கணக்குகள்

### 5.1 அதிகாரசபைக் கணக்குகள்/ நிதியக் கணக்குகள்

வடமத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நியதிச்சட்டத்தின் கீழ் 05 அதிகாரசபைகள் தோற்றுவிக்கப்பட்டதுடன் 05 நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

#### 5.1.1 வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல ஆண்டுகளாக அறவிடவேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 158,082 தொகையான பெருந் தெருக்கள் திணைக்களத்தின் ஊழியர் கடன் மீதி ஒன்றும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்டு இளைப்பாறிய மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற 16 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 627,718 தொகையான கடன் மீதிகளையும் அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கான விலைப்பட்டியல்களைத் தீர்த்துவைத்தலானது பொதுத் திறைசேரியிடமிருந்து பணத்தைப் பெற்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 93 மில்லியன் பணத்தை மீளப்பெற்று விலைப்பட்டியல்கள் தீர்த்துவைக்கப்பட்டதன் காரணமாக நிலையான வைப்புக்களிலிருந்து அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,976,690 தொகையான வட்டி இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒப்பந்தக்காரர்களின் விலைப்பட்டியல்களின் அடிப்படையிலான நிறுத்திவைத்தல் பணத்தை விடுவிப்பதற்கும் முடியாதிருந்தது.

(இ) அதிகாரசபையினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தோற்றுவிக்கப் படாதிருந்ததுடன் அதிகாரசபையின் செயற்பாடுகளை ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவது தொடர்பாக போதியளவில் உள்ளகக் கணக்காய்வானது மாகாண உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காலாண்டிற்கு ஒரு தடவையாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போது அவ்வாறான குழு கூடப்பட்டிருக்கவில்லை.

5.1.2 வடமத்திய மாகாணத்தின் முன்பள்ளி அபிவிருத்தி அதிகாரசபை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண நிதி விதி 261.2.2 இலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய முற்பணங்களின் எல்லை ரூபா 100,000 ஆக இருந்த போதிலும் முன்பள்ளி கல்வி அபிவிருத்தி அதிகாரசபையினால் அந்த எல்லையை மிகைத்து 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 433,200 தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007(1) ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் அரசாங்க சேவைக்குச் சேர்த்துக்கொள்ளும் போது அத்தியாவசியமான பதவிகளுக்கு மாத்திரம் உரிய அமைச்சின் செயலாளரது தனிப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் 12 மாத உச்ச காலத்திற்கு உட்பட்டு உரிய பதவிகளுக்கு நியமிக்கக்கூடியதாக இருந்த போதிலும் முன்பள்ளி கல்வி அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ பணிப்பாளரால் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் நிதி உதவியாளர் பதவிகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இரண்டு உத்தியோகத்தர்களும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 02 ஆண்டு மற்றும் 06 மாத காலத்தில் கடமைகளை மேற்கொண்டு ரூபா 2,338,500 தொகையை சம்பளமாகப் பெற்றிருந்தனர்.

(இ) 2014 ஆம் ஆண்டின் இறுதி 03 மாதங்களுக்காக செலுத்தவேண்டியவைகளாக முன்பள்ளி கல்வி அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 3,000,000 தொகையான ஆசிரியர் படிகளை 2015 ஆம் ஆண்டின் போதும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5.1.3 வடமத்திய மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1996 இன் 34 ஆம் இலக்க பொருட்கள் மற்றும் சேவைகள் வரி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மையினால் 1999 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 11,744,400 தொகையான பொருட்கள் மற்றும் சேவைகள் வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மையினால் அமைய / ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 18 ஊழியர்களுக்காக 2014 சனவரியிலிருந்து 2015 யூலை வரை சம்பளமாக ரூபா 3,068,170 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் என்பவற்றின் பிரகாரம் உரிய பங்களிப்பு பணத்தை 2016 யூலை மாதம் வரை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மையினால் 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளுக்குரிய ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு பணத்தை உரிய திகதியில் அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் ரூபா 206,873 மிகைக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மையின் 02 வங்கி கணக்குகளில் மீதியொன்று இல்லாதிருந்தும் 2015 சனவரி மாதத்தின் போது ரூபா 84,236 தொகையான 07 காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன.

(உ) மாகாண அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரண முகவராண்மையில் 08 மாதங்களுக்கும் 07 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் சேவையிலிருந்து நீங்கிய மற்றும் ஓய்வுபெற்ற 09 உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 941,319 தொகையான ஓய்வூ
தியப் பணிக்கொடை நிதிகள் உரிய உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படாதிருந்தது.

5.1.4 வடமத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

-----------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் தனிப்பட்ட பிரயாணத்திற்காக உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குவதற்குப் பதிலாக ரூபா 30,000 மாதாந்த போக்குவரத்துப் படியை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் வடமத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபையின் தலைவர் ஒரு மாதத்திற்கு ரூபா 40,000 படி போக்குவரத்துப் படியைப் பெற்றுக்கொண்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 120,000 மொத்த தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் பங்களிப்பு பணத்தை செலுத்துவதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் முறையே ரூபா 28,765 மற்றும் ரூபா 18,240 ஆக ரூபா 47,005 மொத்த தொகை மிகைக் கட்டணமாக வடமத்திய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை பங்களிப்புப் பணத்தை செலுத்துவதற்குத் தாமதித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எல்லையை மிகைத்து 10 நேரக் குறிப்பாளர்களும் 07 தொழிலாளர்களும் 08 முகாமைத்துவ உதவியாளர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு மீளாய்வாண்டின் போது சம்பளமும் படிகளுமாக ரூபா 6,307,862 செலுத்தப்பட்டிருந்தது.

5.1.5 வடமத்திய மாகாண முதலமைச்சர் நிதியம்

மீளாய்வாண்டிற்கும் முன்னைய 03 ஆண்டுகளுக்குமான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் ரூபா 5,185,974 மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 47,537 ஆக இருந்தது.

5.1.6 வடமத்திய மாகாண ஊக்குவிப்பு நிதியம்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மூலதனத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டு காட்டப்பட வேண்டியிருந்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 3,764,973 தொகையான மிகை அதில் காசு மீதியாகக் காட்டப்பட்டிருந்ததுடன் அம்மீதி மீளாய்வாண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கின் ஆரம்ப மீதியாகவும் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 3,082,335 ஆக இருக்க வேண்டியிருந்த மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 697,638 மிகையாகி இருந்தது.

5.1.7 வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி நிதியம்

2011 இன் 03 ஆம் இலக்க வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி நியதிச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 சனவரி மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த மேற்கூறிய நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பாகவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டுமெனவும் ஏற்பாடுகள் நியதிச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் நியதிச்சட்டத்தின் 26(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்நிதியம் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பகுதியிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி இருக்க வேண்டியதனால் நிதியத்தின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து கணக்காயவாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,047,235 தொகையான நிதியத்தின் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 217,613 ஆக இருந்தது.

5.1.8 வடமத்திய மாகாண கல்வி அபிவிருத்தி நிதியம்

2005 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்த இந்நிதியத்திற்கான கடந்த 10 ஆண்டுகளுக்கும் மீளாய்வாண்டிற்குமான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 8,331,893 தொகையான நிதியத்தின் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 32,679 ஆக இருந்தது.

5.2 வணிக முற்பணக் கணக்குகள்

ரஜரட எப்.எம் சேவை முற்பணக் கணக்கு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும் வடமத்திய மாகாண சபைக்கும் இடையே ரஜரட எப்.எம் சேவையின் ஒலிபரப்புக் காலத்தை ஒதுக்குவதற்கான உடன்படிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதியிலிருந்து முடிவடைந்திருந்தும் ஏனைய ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கு ரூபா 03 மில்லியன் நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் போது அச்செயற்பாடற்ற முற்பணக் கணக்கு நடவடிக்கைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

06. செயற்பாட்டு மீளாய்வு

6.1 செயலாற்றல்

6.1.1 வடமத்திய மாகாண வருமானத் திணைக்களத்தினால் 07 வருமானத் தலைப்புக்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 301,150,000 தொகையான வருமானம் ரூபா 71,886,638 தொகையினால் மிகைத்து ரூபா 373,036,638 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் மாகாண வருமானத் திணைக்களம் நேரடியாகப் பங்களிப்புச் செய்தது இதில் 7 சதவீதமான ரூபா 26,700,843 தொகையினைச் சேகரிப்பதற்கு மாத்திரம் என்பது அவதானிக்கப்பட்டது. மதுபான உத்தரவுப்பத்திரக் கட்டணம், நீதிமன்ற ஆவணங்களின் அடிப்படையிலான முத்திரைக் கட்டணம், நீதிமன்றத் தண்டப்பணம் என்பவற்றை உள்ளடக்கிய எஞ்சிய ரூபா 346,335,795 தொகையான வருமானத்தைச் சேகரித்தல் ஏனைய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு மாகாண வருமானத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்திருந்ததுடன் அந்நிறுவனங்கள் அந்த வருமானத்தை சேகரித்தல் தொடர்பான நடவடிக்கைகளின் மேற்பார்வை அல்லது பின்தொடர் நடவடிக்கையானது மாகாண வருமானத் திணைக்களத்தினால் போதியளவில் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண வருமானத் திணைக்களம் நேரடியாகச் சேகரித்த வருமானம் ரூபா 26,700,843 ஆக இருந்ததுடன் அவ்வருமானங்களைச் சேகரிக்கும் போது மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 28,448,857 ஆக இருந்தது. அதற்கிணங்க ரூபா 100 வருமானத்தைச் சேகரிப்பதற்கு ரூபா 106.55 செலவு செய்யப்பட்டிருந்தது.

6.1.2 வடமத்திய மாகாணத்தில் க.பொ.த (சா.த) பரீட்சையின் கடந்த மூன்று ஆண்டுகளுக்கான பெறுபேறுகள் தொடர்பான பகுப்பாய்வின் போது முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடையாமைச் சதவீதம் கூடிய பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அம்மாணவர்கள் உயர்கல்வி நடவடிக்கைகளிலிருந்து வெளியேற்றப்படுவதனால் சமூகச் சிக்கல்கள் உருவாகும் வாய்ப்பு விரிவடைந்துள்ளது என்பதனை மறுக்க முடியாதுள்ளது.

| பாடம் | 2015 | | | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடையாதவர்களின் எண்ணிக்கை | சதவீதம் | தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடையாதவர்களின் எண்ணிக்கை | சதவீதம் | தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடையாதவர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
| விஞ்ஞானம் | 16473 | 5680 | 34 | 16193 | 7309 | 45 | 16692 | 6010 | 36 |
| கணிதம் | 16455 | 8358 | 51 | 16159 | 7732 | 48 | 16677 | 8237 | 49 |
| ஆங்கிலம் | 16454 | 10553 | 64 | 16112 | 10565 | 66 | 16674 | 10453 | 63 |

6.1.3 2016 ஆம் ஆண்டில் அடுத்த வருடத்திற்கு தொடர முடியாது என விசேடமாகக் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 2,743,308 தொகையான 03 செயற்திட்டங்களும் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 49,411,384 மதிப்பீட்டுப் பெறுமதியான 214 செயற்திட்டங்களும் மீளாய்வாண்டின் போது பூர்த்திசெய்யப்படாது 2016 ஆம் ஆண்டிற்கு தொடரப்பட்டிருந்தன.

6.1.4 அனைத்து வசதிகளுடன் மகப்பேற்று அறை கெக்கிராவ மாவட்ட வைத்தியசாலைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் வரை வைத்தியசாலையின் பிள்ளை பிறப்பு எண்ணிக்கை 324 இலிருந்து 62 வரை குறைவு அவதானிக்கப்பட்டதுடன் தம்புல்ல மற்றும் அனுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6.1.5 மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அனுராதபுர மாவட்டத்திலுள்ள 06 பிராந்திய வைத்தியசாலைகளும் 02 சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்களும் ரூபா 290,549 பெறுமதியான 70 மருந்து வகைகளைச் சார்ந்த 33845 அலகு காலாவதியான மருந்து இருப்பு நல்ல நிலையில் காணப்பட்ட மருந்துகளுடன் வைத்திருந்ததனால் நோயாளர்களுக்கு காலாவதியான மருந்துகளை விநியோகிக்கும் ஆபத்துக் காணப்பட்டது.

6.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுற்றுலா தகவல் பத்திரம், இருவட்டு கவர்ச்சிகரமான சுற்றுலா இடங்கள் தொடர்பான அறிவித்தல் பலகை, சுற்றுலா தகவல் நிலையத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்குத் தேவையான பயிற்சி நிலையத்தைப் பராமரிப்பதற்குத் தேவையான தொடர்ச்சியான வழிகாட்டல் முதலிய வசதிகளுடன் வழிகாட்டல்களை வழங்குவதற்கு இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் இணங்கியிருந்தும் அந்த வசதிகளுடன் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொண்டு சுற்றுலா தகவல் நிலையத்தை பேணுவதற்கு முதலமைச்சரின் செயலாளர் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் ரூபா 23,491,810 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட சுற்றுலா தகவல் நிலையத்தை மாதாந்தம் அல்லது வருடாந்தம் எதுவித குத்தகையும் அறவிடாமல் வருமானம் வருமானத்தை ஈட்டி பராமரிப்பதற்கு தனியார் தரப்பினர்களுக்கு வடமத்திய மாகாண சபையினால் குத்தகை விடுதலை உடன்படிக்கையின் மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வடமத்திய மாகாண சபையின் 04 நிறுவனங்களில் சேவையாற்றிய மாகாண சபையின் ஏனைய நிறுவனங்களுக்கும் மாகாண சபைக்கு வெளியேயும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 331 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 9,653,017 தொகை மற்றும் 06 நிறுவனங்களில் சேவையாற்றி மரணமடைந்த, ஓய்வுபெற்ற, சேவையைக் கைவிட்டுச் சென்ற 64 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,699,528 தொகையை அறவீடு செய்வதற்கும் 05 நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள 197 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 5,371,202 தொகையை தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. அக்கடன் மீதியில் 03 ஆண்டுகளுக்கு அதிக காலமாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| கணக்கு இலக்கம் | இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் | | இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள உத்தியோகத்தர்கள் | | மரணமடைந்த, ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | தொகை | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | தொகை | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | தொகை |
| | | ரூபா | | ரூபா | | ரூபா |
| 66001 | 47 | 2,596,214 | 48 | 2,235,771 | 4 | 292,360 |
| 66201 | - | - | 02 | 270,814 | 1 | - |
| 66501 | - | - | - | - | 1 | 160,380 |
| 61001 | 41 | 1,013,864 | 85 | 2,514,402 | 7 | 121,890 |
| 61201 | 232 | 5,703,310 | 55 | 198,025 | - | - |
| 62001 | 11 | 339,629 | 07 | 152,190 | 1 | 52,159 |
| 60111 | - | - | - | - | 2 | 240,000 |
| 63101 | - | - | - | - | 48 | 2,832,739 |

(இ) முன்னைய ஆண்டுகளின் போது மாணவர்கள் இல்லாமையின் காரணமாக மூடப்பட்டிருந்த வடமத்திய மாகாணத்தின் 41 மாகாண பாடசாலைகள் நடாத்தப்பட்ட காணிகளும் கட்டிடங்களும் பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 17 பாடசாலைகள் பிரதேச செயலாளரின் முறையான அங்கீகாரமின்றி ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) 2007 யூன் 11 ஆந் திகதிய என்எஸ்சீசீ/3/1/2/IV ஆம் இலக்க தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுச் செயலாளரின் சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் 6/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க வடமத்திய மாகாண சபையின் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திலுள்ள கைத்தொழில் விரிவாக்கல் உத்தியோகத்தர்களின் சம்பளங்களைத் திருத்தம் செய்யும் போது எம்என்-07 சம்பள அளவுத்திட்டம் வழங்குவது பிழையானது என்பதனால் அப்பதவிக்குரிய எம்என்-04 அளவுத்திட்டத்தின் 02 ஆவது கட்டத்தின் பிரகாரம் சரிசெய்யும் போது 2006 ஆம் ஆண்டின் சனவரி மாதத்திலிருந்து 2013 செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதியின் போது 05 கைத்தொழில் விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,262,447 தொகை 2015 யூன் 30 ஆந் திகதி வரையும் தவணை அடிப்படையிலாவது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது சுங்கத்தீர்வை இன்றி கொள்வனவு செய்யப்பட்ட பட்டியல் விலை ரூபா 216,019,620 தொகையான 73 வாகனங்களை காப்புறுதி செய்வதற்காக கேள்வி மனுக்களை கோரும் போது வாகன வழங்குனர்களிடமிருந்து அவற்றின் சந்தை விலைப் பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளாது கிரயம், காப்புறுதி, கப்பற்கட்டன (CIF) பெறுமதி பிரதம செயலாளரினால் காப்புறுதிக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் விலைமனுவைச் சமர்ப்பித்த காப்புறுதிக் கம்பனியால் பல்வேறு சந்தைப் பெறுமதிகளைக் காட்டி தமது கேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. வாகனங்களின் பட்டியல் பெறுமதிகள் மற்றும் சுங்கத்தீர்வைகளின் ரூபா 450,505,329 மொத்தப் பெறுமதியானது ரூபா 58,844,671 இனால் மிகைத்து ரூபா 509,350,000 சந்தைப் பெறுமதிக்கு அந்த 73 வாகனங்களும் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

(ஊ) மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ளாது கௌரவ மாகாண சபை உறுப்பினர்களையும் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய 45 நபர்களுக்காகத் திட்டமிடப்பட்ட தாய்லாந்து மற்றும் கொரியா சுற்றுலா நடவடிக்கைகளுக்கான வெளிநாட்டுப் பயணத்திற்காக ஒழுங்கு செய்த நிறுவனத்திற்கு ரூபா 7,921,800 முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களால் அச்சுற்றுலா இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக அம்முற்பணத்தில் ரூபா 3,921,800 தொகையை மீளப்பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. இச்சுற்றுலாவிற்காக மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு இல்லாமையின் காரணமாக நட்டத்திற்கான உத்தியோகத்தர்கள் பொறுப்பிற்கு கட்டுப்பட்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டு அந்நட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 6.3 மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முரணான கொடுக்கல்களும் செயற்பாடுகளும்

மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் நிறுவனம் சார்ந்த விடயங்களை அமுல்படுத்தும் போது அரசாங்க சேவையிலுள்ள ஒத்த பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்காக பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் முடியுமான அளவு பின்பற்றப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பின்பற்றப்படாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.4 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதம செயலாளர், அமைச்சு செயலாளர்கள் மற்றும் அதற்குச் சமமான உத்தியோகத்தர்கள் மாதாந்தம் ரூபா 500 உச்ச அளவிற்கு உட்பட்டு வீட்டு வாடகை அறவிட்டதன் காரணமாக அவ்வாறான 17 உத்தியோகத்தர்களிடமிருந்து 2015 ஆம் ஆண்டில் ரூபா 831,695 குறைத்து வீட்டு வாடகை அறவீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதம செயலாளர், அமைச்சு செயலாளர்கள் மற்றும் அதற்குச் சமமான 17 உத்தியோகத்தர்கள் குடியிருந்த அரசாங்க இல்லங்களின் நீர்ப் பட்டியல்களினதும் மின்சாரப் பட்டியல்களினதும் பெறுமதியில் 70 சதவீதமானவை நிறுவனங்களின் செலவினத் தலைப்புக்களுக்கு வரவு வைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட பணம் ரூபா 367,643 ஆகும். அவ்வாறே அந்த ஒவ்வொரு உத்தியோகத்தருக்காக நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களுக்காக மாகாண சபை செலவுசெய்திருந்த பணத்தில் முரண்பாடுகளும் காணப்பட்டன.

6.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

---

மாகாண சபை முதலமைச்சரினதும் மாகாண சபை உறுப்பினர்களின் படிகள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட பதவியணியினர்களுக்கான படிகளுக்குமாக ஒவ்வொரு அமைச்சு செலவினத் தலைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து அப்படிகள் முழுவதும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக்கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக மாகாண சபை மற்றும் சபைச் செயலகத்தின் செலவினத் தலைப்பின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 4,877,400 தொகை முதலமைச்சரினதும் ஏனைய அமைச்சர்களினதும் சாரதிப்படிகள் மற்றும் தனிப்பட்ட பதவியணியினர் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் கடந்த மூன்று ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்த அப்படிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,933,600 ஆக இருந்தது.

6.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவைகளிலுள்ள நடைமுறைகளிலிருந்து மீறல்கள்

---

(i) மாகாண விவசாய அமைச்சினால் 2015 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 2,138,000 தொகைக்கு 400 தெளிகருவிகளைக் கொள்வனவு செய்யும் போது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் எழுத்துமூல வேண்டுதல்களின் அடிப்படையில் தகைமைபெற்ற முதலாவது வழங்குனர் ஒரு தெளிகருவிக்காக சமர்ப்பித்திருந்த ரூபா 10,000 விலையை விட ரூபா 690 மிகை விலையுடன் 400 தெளிகருவிகளைக் கொள்வனவு செய்ததன் காரணமாக ரூபா 276,000 தொகையினை மிகையாகச் செலுத்தவேண்டி ஏற்பட்டது. இதில் ரூபா 138,000 தொகை நலன்பெறுனர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 138,000 தொகையான மிகுதி நட்டத்திற்கு அமைச்சர் பொறுப்புக்கூற வேண்டிய போதிலும் அப்பணம் அவரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 250,000 தொகையினை மிகைத்து வழங்கப்பட்ட வேலைகள் சம்பந்தமான ஒப்பந்தமானது எழுத்துமூல மற்றும் முறைப்படியான ஒப்பந்த உடன்படிக்கையாக உரிய தரப்பினர்களின் கையொப்பத்துடன் காணப்படவேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஆளுனர் செயலகத்தினால் ரூபா 3,250,000 பெறுமதியான ஞாபகார்த்த சின்னம் நிர்மாணிக்கும் நடவடிக்கையானது ஒரு தனியார் நிறுவனத்திற்கு முறையான ஒப்பந்த உடன்படிக்கையின்றி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---

(i) இலங்கை பாராளுமன்றத்தில் அல்லது ஏனைய மாகாண சபையின் சபைச் செயலகத்திலோ இல்லாததைப் போல வடமத்திய மாகாண சபையின் மாகாண சபை மற்றும் சபைச் செயலகத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலில்லாத பிரதான முன்னனி உத்தியோகத்தர், பிரதி முன்னனி உத்தியோகத்தர் ஆகிய இரண்டு (02) பதவிகளுக்காக பதவியணியிலுள்ள இரண்டு சிற்றூழியர்கள் 2014 நவம்பர் 01 ஆந் திகதியிலிருந்து பிரதம செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில்

சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். அந்நியமனங்களை வழங்குவதற்கு முன்னர் 2012 ஏப்ரல் 10 ஆந் திகதியிலிருந்து உரிய இரண்டு பதவிகளிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு மாகாண சபை மற்றும் சபைச் செயலகத்தினால் மேற்கூறிய இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஏப்ரல் 10 ஆந் திகதியிலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்காக ரூபா 187,893 மொத்த பெறுமதியானது அந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் சம்பளம் மற்றும் கடமைகளை நிறைவேற்றும் படிகளாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரால் அவருக்கு இணைக்கப்பட்ட வாகனத்திற்காக 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் பெற்றுக்கொள்ளக் கூடியதான அங்கீகரிக்கப்பட்ட 1530 லீற்றர் எரிபொருள் எல்லையை மிகைத்து ரூபா 142,690 பெறுமதியான 1502 லீற்றர் எரிபொருளும் மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் படிக்குத் தகைமையற்ற வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 05 உத்தியோகத்தர்களால் 05 வாகனங்களுக்காக ரூபா 816,335 தொகையான 8593 லீற்றர் எரிபொருளும் மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | உத்தியோகத்தரின் பெயரும் பதவியும் | | பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருள் அளவு | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எல்லை | எல்லையை மிகைத்து பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருள் அளவு | எல்லையை மிகைத்து பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருட்களின் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| | | | லீற்றர் | லீற்றர் | லீற்றர் | ரூபா |
| 1. | திரு.ஐ.ஜி.விஜிதகுமார | தலைவர் | 3032 | 1530 | 1502 | 142,690 |
| 2. | திரு.எஸ்.டபிளயூ.ரீ.சீ.சுனெத் | கணக்காளர் (பதில்) | 2271 | - | 2271 | 215,745 |
| 3. | திரு.ஆர்.எச்.ஏகநாயக | நிர்வாக உத்தியோகத்தர் | 2705 | - | 2705 | 256,975 |
| 4. | திரு.டபிள்யூ.எம்.ஏ.பீ.வலிசுந்தர | பொறியியலாளர் | 1580 | - | 1580 | 150,100 |
| 5. | திரு.பீ.பீ.குமாரசிறி | பொறியியலாளர் | 1359 | - | 1359 | 129,105 |
| 6. | திரு.சீ.கே.குலவர்தன | பொறியியலாளர் | 678 | - | 678 | 64,410 |
| | | | | | | 959,025 |

## 6.6 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 சனவரி 04 ஆந் திகதிய CSA/P1/40 ஆம் இலக்க மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட 2006 மார்ச் 18 ஆந் திகதிய சம இலக்க சுற்றறிக்கையுடனான பின்னிணைப்பு I (III) இன் பிரகாரம் முதலமைச்சருக்கு வழங்கக்கூடிய எரிபொருள் படியை மிகைத்து எரிபொருள் படி வழங்கப்பட்டிருந்ததன் காரணமாகவும், தற்போதைய முதலமைச்சரின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு முன்னர் வழக்கமாக எரிபொருள் வழங்கியிருந்த அரசாங்கத்தின் 02 வாகனங்களைப் போல

வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனத்திற்கும் சுப்பர் எரிபொருள் வழங்கியிருந்ததன் காரணமாகவும் 02 டீசல் வாகனங்களுக்கும் ஒரு பெற்றோல் வாகனத்திற்குமாக முதலமைச்சருக்கு உரித்துடைய ரூபா 1,747,000 தொகையான எரிபொருள் படியானது ரூபா 665,000 ஆல் மிகைத்து ரூபா 2,412,000 தொகை 2015 பெப்ரவரி மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தியின் பிரகாரம் முதலமைச்சரின் தனிப்பட்ட பதவியணியினர் 15 நபர்களை உள்ளடக்கி இருக்க வேண்டிய போதிலும் வடமத்திய மாகாண முதலமைச்சரின் தனிப்பட்ட பதவியணியினர் 28 நபர்களை உள்ளடக்கி இருந்தனர். அதற்கிணங்க, முதலமைச்சரின் பதவியணியினர் 13 நபர்களால் மிகையாக இருந்ததுடன் அந்த 13 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,254,412 தொகை சம்பளம், படிகள் மற்றும் மேலதிக நேர வேலையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) முன்னாள் முதலமைச்சரின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட 02 உத்தியோகபூர்வ வாகனங்களில் ஒரு வாகனம் தற்போதைய முதலமைச்சரின் கடமையை ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கு போதியதல்ல எனவும் ஏனைய பொருத்தமான ஒரு வாகனம் அமைச்சரிடம் இல்லை எனவும் காட்டி ரூபா 95,000 வாடகைக்கு பொருத்தமான வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் கொள்வனவு வழிகாட்டிக் கோவையைக் கருத்தில் கொள்ளாது 2015 மார்ச் மாதத்தின் போது ஒரு மோட்டார் கார் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது 2001 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மீளமைக்கப்பட்ட (recondition) வாகனம் என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2015 மார்ச் மாதத்தின் போது வடமத்திய மாகாண சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 2015 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட சுங்கத்தீர்வையற்ற விலை ரூபா 3,000,000 ஆன மோட்டார் காரின் மாதாந்த குத்தகைப் பணம் ரூபா 63,922 ஆக இருந்த நிலைமையின் மத்தியில் மேற்கூறப்பட்ட வாடகை வாகனத்திற்காக இந்த அடிப்படையில் வாகனம் ஒன்றைப் பெற்றுக்கொண்டிருந்தால் ஒரு மாதத்திற்கு ரூபா 31,008 பொருளாதார நலனைப் போல புதிய வாகனம் ஒன்றை சொந்தமாக்கிக் கொள்ளக் கூடியதாகவும் இருந்தது.

(ஈ) அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வது சம்பந்தமான 2007 நவம்பர் 19 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தால் திருத்தப்பட்ட 2006 சனவரி 04 ஆந் திகதிய சம இலக்கம் கொண்ட மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் சுற்றறிக்கை கடிதத்தின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சர் / பிரதி அமைச்சரின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 03 உத்தியோகபூர்வ வாகனங்கள் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய போதிலும் மாகாண போக்குவரத்து, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரினால் 2015 ஆம் ஆண்டின் போது 04 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இதில் ஒரு வாகனம் 2015 செப்தெம்பர் மாதத்திலிருந்து ரூபா 75,000 மாதாந்த வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 300,000 வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2009 யூலை 17 ஆந் திகதிய சீஏ/1/1/47 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் முதலமைச்சர்கள் அமைச்சரவைக் கூட்டங்களுக்குப் பங்குபற்றும் போது அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லைக்குப் புறம்பாக மேலதிக எரிபொருளுக்கான பணத்தை மீளப்பெறுதலுக்கு இடமளிக்கப்பட்டிருந்தும் அதற்கு முரணாக மாகாண கூட்டுறவு அமைச்சரினால் மாகாணத்துக்கு வெளியேயான கடமைகளாகக் காட்டி ரூபா 150,200 தொகையான எரிபொருள் செலவுகளுக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான 2006 மார்ச் 18 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 சனவரி 04 ஆந் திகதிய சம இலக்கமுடைய மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின்

சுற்றறிக்கை கடிதத்தின் 3.4 ஆம் பந்தியின் மூலம் கௌரவ அமைச்சர் ஒருவருக்கும் 3.2 ஆம் பந்தியின் மூலம் அமைச்சர் ஒருவரின் உதவிப் பதவியணியிலுள்ள ஒரு அங்கத்தவருக்கு ஒரு செல்லிடத் தொலைபேசி வீதம் பயன்படுத்துவதற்கும் அவற்றின் விலைப்பட்டியல்களை அரசாங்கத்தால் தீர்த்துவைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மாகாண போக்குவரத்து மற்றும் கூட்டுறவு அமைச்சர் மற்றும் அவரது தனிப்பட்ட செயலாளரினால் அந்த எல்லையை மிகைத்து மேலும் ஒரு செல்லிடத் தொலைபேசி வீதம் பயன்படுத்தியிருந்ததுடன் அவற்றில் விலைப்பட்டியல்கள் அமைச்சின் செலவினத் தலைப்புக்களின் கீழ் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த மேலதிக தொலைபேசிகளுக்காக தீர்த்துவைக்கப்பட்ட விலைப்பட்டியலின் பெறுமதியானது அமைச்சருக்காக ரூபா 61,857 தொகையும் அவரின் தனிப்பட்ட செயலாளருக்காக ரூபா 68,713 தொகையுமாக இருந்ததுடன் அமைச்சருக்காக விலைப்பட்டியல் தீர்த்துவைக்கப்பட்டிருந்த 02 நடமாடும் தொலைபேசிகளில் அமைச்சரின் பெயரில் ஒரு தொலைபேசி மாத்திரம் காணப்பட்டது. தனிப்பட்ட செயலாளருக்கான விலைப்பட்டியல் தீர்த்துவைக்கப்பட்டிருந்த 02 செல்லிடத் தொலைபேசிகளுமே அமைச்சரின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையின் அனைத்துச் சொத்துக்களினதும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்த பிரதம செயலாளரினால் வடமத்திய மாகாண சபையின் அனைத்து நிறுவனங்களுக்கும் காணப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களினதும் பொறுப்புக்களை ஒப்படைத்து அவற்றிற்குரிய தேவையான தகவல்கள் ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்காததன் காரணமாக குடியிருப்பாளர்களைத் தெரிவுசெய்தல், வாடகை அறவிடுதல் முதலியன பிரதம செயலாளரின் கட்டுப்பாட்டிற்கு உட்படாது ஒவ்வொரு நிறுவன மட்டத்தில் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக குடியிருப்பாளர்களைத் தெரிவுசெய்தல், உடன்படிக்கைகளில் கையெழுத்திடல், வீடுகளிலிருந்து வெளியேற்றுதல், வாடகை அறவிடுதல் முதலிய சந்தர்ப்பங்களின் போது முறையற்றதும் பொருத்தமற்றதுமான செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தற்பொழுது பிரதம செயலகத்தினால் செயற்படுத்தப்படுகின்ற 33 உத்தியோகபூர்வ இல்லங்களில் 14 உத்தியோகபூர்வ இல்லங்களின் உரிமை அனுராதபுரம் மாவட்ட செயலகத்திடம் காணப்பட்ட போதிலும் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களை பிரதம செயலாளருக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே எஞ்சியுள்ள 19 உத்தியோகபூர்வ இல்லங்களினதும் உரிமையையும் உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியதான ஆவணங்கள் பிரதம செயலாளரிடம் இல்லாதிருந்ததுடன் அந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் பிரதம செயலகத்தின் சொத்தாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011/12/01/04 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவருக்கும் பொது முகாமையாளருக்கும் தவிர ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வாகனம் ஒதுக்கீடு செய்தல் பொருத்தமற்றது எனவும் சட்டரீதியானதல்ல எனவும் பொது முகாமையாளருக்கும் தலைவருக்கும் ஒதுக்கீடு செய்த வாகனங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து வாகனங்களும் தலைமை அலுவலக வளவில் நிறுத்திவைக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தும் அதற்கு முரணாக அதிகாரசபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் நிறைவேற்றுப் பொறியியலாளர்களால் அதிகாரசபையின் வாகனங்களை இரவு வேளைகளில் தமது வதிவிடங்களில் நிறுத்திவைத்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) அனுராதபுரம் வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய 04 பாடசாலைகள் நேரடி கற்பித்தல் செயற்பாட்டிற்காக வழங்கியிருந்த 08 கணனிகளையும் துணைக்கருவிகளையும் 2013 ஆம் ஆண்டிலிருந்து அனுராதபுரம் வலயக் கல்வி அலுவலகத்தின் அலுவலக

நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தியிருந்த நிலைமையின் மூலம் அவ்வளங்கள் நோக்கத்திற்குரிய நிலைமைக்கு மாற்றமாக பயன்படுத்தப்படாத நிலைமைக்கு மாறியிருந்தது.

6.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---

தென் மாகாணத்தின் வரலாற்று, கலாச்சார, சமூக வாழ்க்கை மற்றும் பொருளாதாரம் சம்பந்தமான தகவல்களையும் படங்களையும் உள்ளடக்கிய தென் மாகாண சபைக்காகத் தொகுக்கப்பட்ட புத்தகம் ரூபா 12,000 செலுத்தி விவசாய அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதனைக் கொள்வனவு செய்யும் தேவைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த புத்தகத்தை ஏனைய அனைத்து மாகாண அமைச்சுக்களையும் உள்ளடக்கிய முக்கிய நிறுவனங்களாலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

6.9 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதம செயலாளர் அலுவலகத்திற்காக ரூபா 11,377,390 தொகையான 13 மின்சாரப் பட்டியல்களை உரிய திகதிக்கு முன்னர் செலுத்தாமையின் காரணமாக இலங்கை மின்சார சபைக்கும் ரூபா 106,946 தொகையான மிகைக் கட்டணம் மீளாய்வாண்டின் போது செலுத்தவேண்டி ஏற்பட்டது.

(ஆ) மாகாண விவசாய அமைச்சினால் 2015 ஆம் ஆண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட 15,000 கிலோகிராம் விதை சோளத்தை கொள்வனவு செய்வதற்கு ரூபா 13,350,000 தொகையைச் செலுத்தியமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாகாண விவசாய அமைச்சினால் 5,000 கிலோகிராம் விதை சோளத்தைக் கொள்வனவு செய்வதற்கு வழங்குனர்களைத் தெரிவு செய்வதற்காக வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரங்களில் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.6 ஆம் வழிகாட்டிக்கு முரணாக “இறக்குமதி செய்யப்பட்ட விதை சோளத்திற்காக விலை மனுக்கள் கோரப்பட்டமையினால் உள்நாட்டு விதை உற்பத்திகள் பின்னடைவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே ஆகக்குறைந்த விலை மனுவை நிராகரித்து விவசாயிகள் வேண்டுகின்ற விதை வகைகளை அதிக விலை மனுவின் அடிப்படையில் கொள்வனவு செய்ததன் காரணமாக மாகாண சபைக்கு ரூபா 112,500 தொகையான நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. விவசாயிகள் அதிக விலையுடன் விதைகளை கோரியிருந்தார்களாயின் இப்பணம் அந்த விவசாயிகளின் நலன்பெறுனர்கள் பங்களிப்பிலிருந்து ஈடுசெய்யக் கூடியதாக இருந்தது.

(ii) மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவை அங்கீகரித்துள்ள கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.6 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் முதலாவதாக கொள்வனவு செய்த அளவில் அரைவாசிக்கு குறைந்த அளவு கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக கொள்வனவு செய்யக் கூடியதாக இருந்த போதிலும் அமைச்சினால் முதலாவதாக கொள்வனவு செய்திருந்த இறக்குமதி செய்யப்பட்ட 5,000 கிலோகிராம் விதை சோளத்தைப் போல இரண்டு மடங்காகிய 10,000 கிலோகிராம் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக கொள்வனவு செய்வதற்கு மாகாண அமைச்சரவை அங்கீகரித்திருந்தது.

6.10 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபை வீதியாகிய பண்டுகாபயபுர மலியதேவ மாவத்தைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கன அடிக்கு மிகையாக Asphalt ஈடுபடுத்தப்பட்டு ABC மூலம் நிரப்பக்கூடியதாகவிருந்த பகுதியை நிரப்புவதற்காக Asphalt ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 805,040 தொகையும் போக்குவரத்துச் செய்யப்பட்ட Asphalt அளவை அதிகரித்துக் காட்டியதன் காரணமாக ரூபா 954,975 தொகையும் ஆக ரூபா 1,760,015 தொகையான Asphalt இற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண நிதி விதி 422.2 இன் பிரகாரம் சந்தை விலை கோரல் முறைமை பின்பற்றப்பட்டு வடமத்திய மாகாணத்தில் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களுக்கு முதலமைச்சினால் 115 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டமை முதலமைச்சின் கொள்வனவு பதிவேட்டில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த பதிவேட்டையும் ஒப்பந்த கோவைகளையும் பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வடமத்திய மாகாணத்தில் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டு ஒப்பந்தக்காரர்கள் தெரிவுசெய்யப்படுவார்களாக இருந்தால் பதிவுசெய்யப்பட்ட அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் சமமான வாய்ப்பினை வழங்குவதற்காக வடமத்திய மாகாண சபையில் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களின் பட்டியலில் முதலாவது ஒப்பந்தக்காரரிலிருந்து இறுதி ஒப்பந்தக்காரர் வரை விலை மனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான பொருத்தமான முறைமை ஒன்று பின்பற்றப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த 115 ஒப்பந்தங்களில் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த 80 ஒப்பந்தங்களுக்குரிய கோவைகளைப் பரீட்சித்த போது மாகாண சபையில் பதிவுசெய்துகொண்ட 169 ஒப்பந்தக்காரர்களுக்கு மத்தியில் 41 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 05-14 இற்கும் இடைப்பட்ட சந்தர்ப்பங்களில் விலை மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் 68 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒரு சந்தர்ப்பத்திலேனும் விலை மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) அவ்வாறே வடமத்திய மாகாணத்தில் பதிவுசெய்து கொண்டிருக்காத 09 ஒப்பந்தக்காரர்களுக்கு உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 38,402,027 தொகையான 17 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) கொள்வனவு நடைமுறைகளைப் பூர்த்திசெய்து உடன்படிக்கைகள் செய்துகொள்வதற்கு முன்னர் மாகாண சபை கட்டிடத் தொகுதி வளவில் சட்டரீதியான அனுமதியின்றி ரூபா 3,289,580 மதிப்பீட்டுப் பெறுமதியான வாகனத் தரிப்பிடம் ஒன்று 2015 மார்ச் 20 ஆந் திகதி வரை நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் அதற்குரிய ஒப்பந்தக் கோவை 2016 யூலை 31 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6.11 பதவியணியினர் நிர்வாகம்

6.11.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்களை உள்ளடக்கிய நிறுவனங்கள்

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை | மிகை | (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 749 | 715 | - | (34) |
| (ii) | மூன்றாம் மட்டம் | 248 | 137 | - | (111) |
| (iii) | இரண்டாம் மட்டம் | 4207 | 2997 | - | (1210) |
| (iv) | ஆரம்ப மட்டம் | 3008 | 2571 | - | (437) |
| (v) | ஏனையோர் (அமைய / தற்காலிகம்) | 11 | 05 | - | (06) |
| | மொத்தம் | 8223 | 6425 | - | (1798) |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 153 பதவியணியினர்களை மிகைத்து பதிலாள் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 111 தொழிலாளர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 28,136,783 தொகையான சம்பளம் வீதிப் பராமரிப்பு செலவின விடயத்திற்கு வரவுவைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தின் நடவடிக்கைகளை நாளதுவரையாக்குவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த கணக்காளர் பதவிகள் மற்றும் 2015 ஆம் ஆண்டின் யூன் மாதத்தின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 23 உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிகளுக்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மாகாண உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாகிய வடமத்திய மாகாண சபையின் அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிழைகளையும் மோசடிகளையும் தவிர்த்துக்கொள்வதற்காகவும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் அறிமுகப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகளிலுள்ள பலவீனங்களை இனங்கண்டு அப்பலவீனங்களை இல்லாமல் செய்வதற்கு எடுக்கவேண்டிய நடைமுறைகளை மேல்மட்ட முகாமைத்துவத்துக்கு அறிவிக்கும் வகையில் கணக்காய்வு நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல், புலனாய்வு நடவடிக்கைகளின் செயற்திறனை அபிவிருத்தி செய்தல், நல்லாட்சி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்குத் தடையாக இருந்தது.

(இ) மாகாண கல்வித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களில் உள்ளடக்கப்படாத 05 பதவிகளுக்காக 86 நபர்களும் பாடசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களில் உள்ளடக்கப்படாத 06 பதவிகளுக்காக 35 நபர்களும் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் அலுவலக உதவியாளர் பதவிகளுக்காக 03 மிகை உத்தியோகத்தர்களும் சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும் அலுவலக

உதவியாளர்களுக்கு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 296,375 தொகை மேலதிக நேர வேலைப்படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஒரு நிர்வாக உத்தியோகத்தர் பதவி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் முதலமைச்சிலுள்ள உள்ளபடியான பதவியணியில் இரண்டு நிர்வாக உத்தியோகத்தர்கள் காணப்பட்டதுடன் அவர்களில் ஒருவர் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். 2012 திசெம்பர் 05 ஆந் திகதியிலிருந்து 2016 யூன் 30 ஆந் திகதி வரையான காலத்திற்காக ஒரு உத்தியோகத்தருக்கு சம்பளமும் படிகளுமாக ரூபா 1,634,315 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பணத்திற்காக அதிகாரசபையிடமிருந்து மீளளிப்புக்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

6.11.2 பாடசாலைப் பதவியணியினர்

| | | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ள படியானவை | மிகை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 1017 | 732 | - | 285 |
| (ii) | ஆசிரியர்கள் | 15981 | 15456 | - | 525 |
| (iii) | ஆசிரிய உதவியாளர்கள் | - | 55 | 55 | - |
| (iv) | திட்டமிடல் மற்றும் நிதி உதவியாளர்கள் / அபிவிருத்தி உதவியாளர்கள் / நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் / முகாமைத்துவ உதவியாளர் / ஆய்வுகூட உதவியாளர் / வதிவிட பராமரிப்பாளர் | 936 | 107 | - | 829 |
| (v) | சிற்றூழியர் | 1317 | 1364 | 47 | - |
| (vi) | ஏனையோர் | - | 05 | 05 | - |
| | மொத்தம் | 19251 | 17719 | 107 | 1639 |

(அ) கலன்பிந்துனுவெவ கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் 07 ஆசிரியர்கள் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஏனைய நிறுவனங்களின் கடமைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே இந்த ஆசிரியர்களுக்கு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,707,408 தொகையான சம்பளமும் படிகளும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த சம்பளமும் படிகளும் அந்த ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்ட நிறுவனங்களிலிருந்து மீளப்பெற்றுக்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வடமத்திய மாகாணத்திலுள்ள 805 பாடசாலைகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்விசார் பதவியணியினர் மற்றும் கல்விசாரா பதவியணியினர்களில் முறையே 1050 மற்றும் 828 நபர்களின் பற்றாக்குறை காணப்பட்டது. அப்பற்றாக்குறையானது பாடசாலைகளில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைந்துகொள்வதற்கு தடையாகக் காணப்பட்டதுடன் 2016 மார்ச் 31 ஆந் திகதி வரை கல்விசாரா பதவியணியிலுள்ள சில பதவிகளில் 110 நபர்களின் மிகைப் பதவியணி காணப்பட்டது. அம்மிகைப் பதவியணிக்கு மாதாந்தம் செலுத்தப்படுகின்ற சம்பளம் சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கலாக மாறியிருந்தது.

6.11.3 வைத்தியசாலை பதவியணியினர்

| | | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை | மிகை | பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|
| (i) | விசேட வைத்திய உத்தியோகத்தர் | 21 | 17 | - | 04 |
| (ii) | தரம் வாய்ந்த வைத்திய உத்தியோகத்தர் | 356 | 365 | 09 | - |
| (iii) | ஏனைய வைத்திய உத்தியோகத்தர்கள் | 85 | 89 | 04 | - |
| (iv) | தாதி உத்தியோகத்தர்கள் (வைத்தியசாலை) | 590 | 589 | - | 01 |
| (v) | தாதி உத்தியோகத்தர்கள் (பொதுமக்கள் சுகாதாரம்) | 31 | 13 | - | 18 |
| (vi) | மத்திய தர தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 1100 | 812 | - | 288 |
| | தொழில்நுட்ப / தடுப்பு மருந்தாளர் / வாட்டு இலிதர் / உணவுப் பொறுப்பாளர் மற்றும் ஏனையோர் | 177 | 111 | - | 66 |
| (vii) | தொழிலாளர்(பொது) | 363 | 221 | - | 142 |
| (viii) | தொழிலாளர் (சுகாதாரம்) | 394 | 694 | 300 | - |
| (ix) | கண்காணிமார் | 444 | 403 | - | 41 |
| | மொத்தம் | 3561 | 3314 | 313 | 560 |

6.12 வாகனப் பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாளாந்த ஓட்டக் குறிப்புக்களைப் பூர்த்திசெய்யும் போது மாகாண விவசாய அமைச்சின் உத்தியோகத்தர்களும் சாரதிகளும் சூட்சமாக (மோசடி செய்வதற்காக கூட்டாகச் செயற்படல்) நடவடிக்கை எடுத்து பயண விபரம், ஒவ்வொரு பயணத் தூரம், வருகை தந்த மற்றும் வெளிச்சென்ற நேரம் என்பவற்றிற்காக பிழையான தகவல்களைச் சமர்ப்பித்து சாரதிகளால் ஓட்ட அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் உரிய உத்தியோகத்தர்களால் அவற்றில் கையொப்பமிட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) 1987 இன் 42 ஆம் இலக்க, மாகாண சபை அதிகாரச்சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளில் உருவாக்கிக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படாதிருந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்த வடமத்திய மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு தற்காலிக பயன்பாட்டிற்கு ரூபா 7,100,000 சந்தைப் பெறுமதியான டபிள் கெப் வாகனம் ஒன்று வடமத்திய மாகாண பிரதம செயலாளரினால் வழங்கப்பட்டிருந்தது. அந்த வாகனம் 2015 யூலை 01 ஆந் திகதி வெளி நபர் ஒருவரினால் ஓட்டிச் செல்லுகையில் விபத்துக்குள்ளாகிய போதிலும் விபத்து தொடர்பாக தொடக்க விசாரணையை நடாத்துவதற்காக பிரதம செயலாளரினால் விசாரணை உத்தியோகத்தர் ஒருவர் விபத்து நடந்து 06 மாதங்களைக் கடப்பதற்கு அண்மித்த 2015 திசெம்பர் 26 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த விசாரணை அறிக்கை 2016 மார்ச் 14 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் விபத்துக்குப் பொறுப்பான நபர்களும் நட்டத்தின் அளவும் அறிந்து கொள்ளாமல் கொள்வனவு வழிகாட்டிக் கோவைகளையும் கவனத்தில்

கொள்ளாது பழுதுபார்ப்பதற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி தனியார் கராஜிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2016 யூலை 30 ஆந் திகதி வரையும் அந்த வாகனம் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

6.13 வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள்

மாகாண கல்வித் திணைக்களத்தின் 03 வங்கி கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்படாத கொடுப்பனவுகள் ரூபா 2,407,670 ஆக இருந்ததுடன் 2016 மே மாதமளவில் அப்பெறுமதி ரூபா 2,384,370 ஆக இருந்தது.

07. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் பீஎப்/ஆர்/2/2/3/5/(4) ஆம் இலக்க 2010 மார்ச் 10 ஆந் திகதிய சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் மாகாண சபை அதன் ஒவ்வொரு அமைச்சு, திணைக்களம் மற்றும் நிறுவனங்களால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

7.2 உள்ளகக் கணக்காய்வு

மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தவறுகளையும் மோசடிகளையும் தடுப்பதற்காகவும் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் இனங்காணப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்களை இனங்கண்டு அப்பலவீனங்களையும் அவற்றை தவிர்த்துக் கொள்வதற்கும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும் மேல்மட்ட முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடுவது மாகாண உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக உள்ளதுடன் ஒவ்வொரு ஆண்டிலும் கணக்காய்வு மற்றும் புலனாய்வுச் செயற்பாடுகளை ஒப்படைக்கும் போது மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகாரசபைகள் என்பவற்றை உள்ளடக்கிய அனைத்து நிறுவனங்களதும் உள்ளகக் கட்டுப்பாடுகளில் பிரதான குறைபாடுகளை இனங்காணக்கூடிய வகையில் அது செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களின் பிரகாரம் பிரதானமாக அமுல்படுத்தப்படவேண்டிய அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகாரசபைகள் என்பவற்றை உள்ளடக்கிய நிறுவனங்கள் சம்பந்தமாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

7.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009 (i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவையாவது நடாத்தப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மாகாண சபையின் ஒவ்வொரு அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களால் அக்குழு கூட்டப்பட்டிருக்கவில்லை.

7.4 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களால் 2014 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| பிரதான துறை | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | போதியளவு கணக்கீட்டு முறைமை அறிமுகப்படுத்தியிருக்காமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | முறைப்படியாக மதிப்பீடு தயாரிக்கப்படாமை. |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்தங்கள் தொடர்பாக கொள்வனவு வழிகாட்டிக் கோவைகள் பின்பற்றப்படாமை. |
| (ஈ) நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அனைத்து சொத்துக்களும் உள்ளடக்கப் பட்டிருக்காமை. |
| (உ) மனித வளங்கள் முகாமைத்துவம் | ஆட்சேர்ப்பு நடைமுறைகளை வழிகாட்டி களுக்கு முரணாகத் தயாரித்தமை மற்றும் அங்கீகரித்த பதவியணியினர்களைச் சேர்த்துக்கொள்ளாமை. |
| (ஊ) செயற்திட்டங்களைத் திட்டமிடலும் அமுல்படுத்தலும் | திட்டமிட்ட செயற்திட்டங்கள் அதே முறைப்படி அமுல்படுத்தப்படாமை. |
| (எ) கொள்வனவு நடைமுறை | கொள்வனவு வழிகாட்டிக் கோவைகளைப் பின்பற்றாமை. |
| (ஏ) களஞ்சியக் கட்டுப்பாடு | இருப்பேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்படாமை. |
| (ஐ) வருகை மற்றும் மேலதிக நேர வேலைக் கட்டுப்பாடு | கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் முறையாக மேற்பார்வைக்கு உட்பட்டி ருக்காமை. |